NSW கல்வித் திணைக்களம்



# ஒவ்வொரு நாளும் முக்கியம்

உங்களுடைய பிள்ளை அவருடைய கற்றலில் இருந்து கூடிய பலனைப் பெறவும், அவரது வாழ்க்கைத்தொழில் மற்றும் வாழ்க்கைக்கான தெரிவுகளை அவர் மேம்படுத்திக்கொள்ளவும் பாடசாலைக்கு ஒவ்வொரு நாளும் வருவது உங்களுடைய பிள்ளைக்கு உதவியாக இருக்கும்.

உங்களுடைய பிள்ளையினது கற்றல் விரிவடையவும், அவருக்கு சமமான மற்ற பிள்ளைகளுடன் நேர்முகமான நட்புகளை அவர் ஏற்பத்திக்கொள்ளவும் பாடசாலைக்குத் தவறாமல் வருகை தருவதென்பது உதவக்கூடும்.

எக் காரணத்தை முன்னிட்டாவது உங்களுடைய பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்புவதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவு செய்து எமது உதவியை நாடுங்கள்.

பாடசாலையுடன் தொடர்புகொள்வதில் உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450-ஐ அழைத்து, உங்களுக்குத் தேவைப்படும் மொழி என்ன என்பதைத் தொலைபேசி இயக்குநருக்குச் சொல்லி, பாடசாலையை அழைக்குமாறு அவரைக் கேளுங்கள். உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக தொலைபேசி இயக்குநர் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.

NSW GOVERNMENT